**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு – 2017/2018 (செப்டம்பர் 2020)**

# FA 3113 Introduction to Art Theories and Practices

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**பகுதி – I இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி – II இல் இருந்து மூன்று வினாக்களுக்கமாக மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

## பகுதி – I

01. (அ) "கலைக் கோட்பாடுகள்" என்பதன் அர்த்தப்பாடு யாது? விளக்கம் தருக.
(05 புள்ளிகள்)

(ஆ) இக்கோட்பாடுகள் தோற்றம் பெற்றமைக்கான சமூகப் பின்புலங்கள் பற்றி சுருக்கமாக விளக்குக.
(09 புள்ளிகள்)

02. (அ) மனப்பதிவு வாதம் என்றால் என்ன? சுருக்கமாக விளக்குக.
(05 புள்ளிகள்)

(ஆ) மனப்பதிவு வாதத்தின் நோக்கம், அதன் சமூகப் பொருத்தப்பாடு பற்றி கருத்துரைக்குக.
(09 புள்ளிகள்)

03. (அ) ஓவியக் கருப்பொருளாக மனிதனே இடம்பெற வேண்டும் என்பதனை வெளிப்பாட்டுவாத ஓவியர்கள் எவ்வாறு நிறுவ முற்படுகின்றனர்? சிறு விளக்கம் தருக.
(05 புள்ளிகள்)

(ஆ) வெளிப்பாட்டுவாதிகளின் ஆக்கங்களில் தன்னுருவ ஓவியங்கள் குறிப்பிடத்தக்கனவாக இருந்தமையைச் சுருக்கமாக எடுத்துரைக்குக.
(09 புள்ளிகள்)

## பகுதி – II

04. "பெண்களின் அவல நிலையினை நவீன ஓவியங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன" இக்கூற்றினை ஆதார பூர்வமாக நிறுவுக.
(24 புள்ளிகள்)

05. உளவியல்சார் வெளிப்பாடுகளுக்கு சர்ரியலிஸ (Surrealism) ஓவியர்கள் அளித்த முக்கியத்துவங்களை அவர்களின் ஓவியங்களினூடாக தெளிவுபடுத்துக.
(24 புள்ளிகள்)

06. ஓவியங்களின் கருப்பொருளை வலியுறுத்துவதில் வர்ணங்கள் பெறும் முக்கியத்துவத்தினை இருபதாம் நூற்றாண்டில் ஓவியங்களின் துணை கொண்டு ஆராய்க.
(24 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றிற்கு விளக்கம் தருக.
   1. போவிசம் (Fauvism)
   2. தற்குறிப்பேற்றக் கலை (Futurism)
   3. டாடாயிஸம் (Dadaism)
   4. பியூரிஸம் (Purism)